பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 04 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u> -

1. ஜம்மு-கஷ்மீரில் உள்ள காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தீவிரவாதத்துக்கு துணை போவதாக பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2. எதிர்க்கட்சிகளின் பலத்தை பிரதமர் தவறாக கணித்து வருவதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

3. புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விண்வெளி கழிவுகள் இல்லாத விண்வெளியை உருவாக்க அனைவரும் கவனம் செலுத்த வேண்டுமென்று இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. சத்திஷ்கர் மாநிலத்தில் **Kanker** என்ற இடத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் - நக்ஸலைட் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கி சண்டையில் 18 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

5 ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைகிறது.

இதனையடுத்து அரசியல் கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் 39 தொகுதிகள் உட்பட நாடு முழுவதும் 12 மாநிலங்கள் மற்றும் யுனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சியினர் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி மேற்குவங்கம் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

பிஜேபி மூத்த தலைவரும் உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா ஜம்மு-கஷ்மீரில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பலூரா-வில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், காங்கிரஸ் மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவை தீவிரவாதத்தை தூண்டி விடுவதாகவும் குற்றம்சாட்டினார்.

இந்த கட்சிகளிடமிருந்து இளைஞர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

உச்சநீதிமன்றம் அளிக்கும் தேதியில், ஜம்மு-கஷ்மீரில் சட்டமன்ற தேர்தல் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் திரு அமித்ஷா கூறினார்.

[]<<<>>>[]

எதிர்க்கட்சிகளின் பலத்தை பிரதமர் தவறாக கணித்து வருவதாக காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

தமது கட்சி மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட அவர், காங்கிரஸ் கட்சி அளித்துள்ள வாக்குறுதிகளை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறினார்.

நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம் குறிதது எதிர்க்கட்சிகள் சிந்திப்பதாகவும் திரு மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தேர்தல் பிரச்சாரத்தின்போது பெண்களை அவமரியாதையுடன் பேசுவதையும், அவர்களுக்கு இழுக்கு வரும் விதத்தில் நடந்து கொள்வதையும் ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

அது தொடர்பாக வரும் புகார்கள் மீது உடனடியாக ஆணையம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மக்களவைத் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்த பின் அரசியல் கட்சிகளிடமிருந்து இதுவரை 200-க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளதாக தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதில் 169 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

இதில் 51 புகார்கள் பிஜேபி-யிடமிருந்தும், 59 புகார்கள் காங்கிரஸ் கட்சியிடமிருந்தும், 90 புகார்கள் மற்ற கட்சிகளிடமிருந்தும் வந்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

மக்களவை தேர்தல் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில், வாக்குப்பதிவுக்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

வாக்குச்சாவடிகளுக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்வது உள்ளிட்ட பணிகளை தேர்தல் அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

வாக்குச்சாவடி மையங்களில் சி சி டி வி கேமராக்கள் பொருத்தும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர்களுக்குத் தேவையான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் தேர்தல் அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

அதேசமயம் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவ மாணவியர் அனைவரும் தவறாது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

**[]<<<>>>[]**

மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசின் திட்டங்கள் உதவி உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் தம்மை சந்தித்த இந்திய பொருளாதார சேவைப் பணிக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளம் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், தங்கள் பணித்திறமையை மேம்படுத்துவதற்கு புதிய எண்ணங்கள், புதிய வழிமுறைகள், புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பொருளாதார வளர்ச்சி என்பது நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள ஏழைகள் மற்றும் பின்தங்கிய மக்களின் நலனை பாதுகாக்கும் வகையில் தங்களது பணி அமைய வேண்டுமென்றும் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலத்தில் **Kanker** என்ற இடத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் - நக்ஸலைட் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கி சண்டையில் 18 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த சண்டையில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூன்று பேர் காயமடைந்தனர்.

நக்ஸலைட்டுகள் பதுங்கி இருந்த இடத்திலிருந்து ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

2030-ஆம் ஆண்டுக்குள் கழிவுகளை ஏற்படுத்தாத விண்வெளி பயணங்களை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத் தெரிவித்துள்ளார்.

விண்வெளி கழிவுகள் தொடர்பாக இன்று பெங்களூருவில் நடைபெற்ற 42-வது ஆண்டு கூட்டத்தில் பேசிய அவர், விண்வெளி ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், அமைப்புகள் ஒன்றாக இணைந்து இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விண்வெளித்துறையில் பல்வேறு ஆய்வுகள் நடைபெறுவதால் அதிகமான விண்கலங்கள் விண்ணிற்கு செலுத்தப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக அங்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனை களையும் விதத்தில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விண்வெளி கழிவுகள் இல்லாத விண்வெளியை உருவாக்க அனைவரும் கவனம் செலுத்த வேண்டுமென்றும் திரு சோம்நாத் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

2023-ஆம் ஆண்டுக்கான குடிமைப்பணி முதன்மை தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

மொத்தம் ஆயிரத்து 16 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கான்பூர் ஐ ஐ டி-யைச் சேர்ந்த ஆதித்ய ஸ்ரீவஸ்த்சவ முதலிடம் பெற்றுள்ளார்.

முதல் 25 இடங்களில் பத்து இடங்களை பெண்களும், 15 இடங்களில் ஆண்களும் தேர்வு பெற்றுள்ளனர்.

தமிழகத்தைச் சேர்ந்த பிரசாந்த் அகில இந்திய அளவில் 78-வது இடத்தையும், மாநிலத்தில் முதலிடத்தையும் பிடித்துள்ளார்.

இந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வை ஆறு லட்சம் பேர் எழுதினர்.

குடிமைப்பணித் தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் அயராத உழைப்பு காரணமாக இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது என்றும், மக்கள் சேவையை மனதில் கொண்டு பணியாற்ற வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க முன்வர வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராம குடிநீர் தொட்டியில் அசுத்தம் செய்த விவகாரம் தொடர்பான வழக்கில் மூன்று மாதங்களில் புலன் விசாரணை முடிக்கப்படும் என்று காவல்துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா, நீதிபதி திரு சத்யநாராயண பிரசாத் அமர்வு 15 மாதங்கள் ஆகிவும் புலன் விசாரணை முடிக்காதது குறித்து கேள்வி எழுப்பினர்.

**[]<<<>>>[]**

ஈரான் நாட்டின் அணு உலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடும் என்று சர்வதேச அணுசக்தி அமைப்பும், ஐ நா-வின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பும் எச்சரித்துள்ளன.

இதற்கிடையே ஈரான் தனது அணு உலை உற்பத்தியை நிறுத்தி வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இஸ்ரேல் அதிபர் திரு பெஞ்சமின் நேதன்யாகு தமது கேபினட் அமைச்சர்களை சந்தித்து, ஈரான் தாக்குதல் தொடர்பாக அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதித்ததாக தெரிகிறது. ஈரான் தாக்குதலுக்க தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் ராணுவ தளபதி தெரிவித்துள்ளார். ஈரான் 300 ட்ரோன்களை அனுப்பி தாக்குதல் தொடுத்ததாக இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த ட்ரோன்கள் அனைத்தும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்கு இடையே எழுந்துள்ள போர் பதற்றத்தை தவிர்க்குமாறு உலக தலைவர்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா அணி - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. கொல்கத்தாவில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

**[]<<<>>>[]**

சீனாவின் மக்காவ் நகரில் நடைபெற்றுவரும் உலக டேபிள் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா, மணிக்கா பத்ரா-வும் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

***End of News***